பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

02 08 2024      12 40
வெள்ளிக்கிழமை      பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தலைமையில் மாநில ஆளுநர்களின் இரண்டு நாள் மாநாடு இன்று புதுதில்லியில் தொடங்கியது.
2. கேரளாவின் வயநாட்டில் நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.
3. தமிழகத்தில் புதிய குடும்ப அட்டைகள் இம்மாதத்தில் விநியோகிக்கப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.
4. நடப்பு ஆண்டுக்கான புதுச்சேரி பட்ஜெட்டில் மீனவர்களுக்கு மீன்பிடி தடைகால நிவாரணத் தொகை எட்டாயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
5. இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று கொழும்புவில் நடைபெறுகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மாநில ஆளுநர்களின் இரண்டு நாள் மாநாடு இன்று புதுதில்லியில் தொடங்கியது.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்ம இம்மாநாட்டை தொடங்கி வைத்தார்.

திருமதி திரௌபதி முர்மு குடியரசுத் தலைவராகப் பதவியேற்ற பின் நடைபெறும் முதல் ஆளுநர்கள் மாநாடு இதுவாகும்.

அனைத்து மாநிலங்களின் ஆளுநர்களும் இதில் கலந்து கொண்டுள்ளனர்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திரமோடி, மத்திய அமைச்சர்கள் திரு அமித்ஷா, திரு தர்மேந்திரபிரதான், திரு சிவராஜ் சிங் சௌகான் திரு அஸ்வினி வைஷ்ணவ், திரு மன்சுக் மாண்டவியா ஆகியோரும் இம்மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

நித்தி ஆயோக்கின் துணைத்தலைவர், தலைமை செயல் அதிகாரி மற்றும் பிரதமர் அலுவலகத்தின் மூத்த அதிகாரிகளும், முக்கிய துறைகளின் அதிகாரிகளும், அமைச்சரவை செயலர்களும் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

மூன்று குற்றவியல் சட்டங்களை திறம்பட நடைமுறைப்படுத்துவது, உயர்கல்வியில் சீர்திருத்தங்களை கொண்டு வருவது, பல்கலைக்கழகங்களுக்கான அங்கீகாரம், பழங்குடியினர் வசிக்கும் பகுதிகள் மற்றும் முன்னோடி மாவட்டங்கள், வட்டாரங்கள் மற்றும் நாட்டின் எல்லைப் பகுதிகளில் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவது உள்ளிட்டவை குறித்தும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளது.

ஒரே பாரதம் உன்னத பாரதம், அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம், இயற்கை விவசாயம், எனது பாரதம் உள்ளிட்ட இயக்கங்களை செயல்படுத்துவதில் ஆளுநர்களின் பங்கு குறித்தும் இதில் விவாதிக்கப்பட உள்ளது.

ஒவ்வொரு மாநிலத்திலும் செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய அரசின் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவது குறித்தும் இந்த இரண்டு நாள் மாநாட்டில் விரிவாக ஆராயப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

உத்தராகண்ட் மாநிலத்தில் பெய்து வரும் கனமழை மற்றும் அதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து பிரதமர் அலுவலகம் உன்னிப்பாக கவனித்து வருவதாக தெரிவித்துள்ளது.

இந்திய விமானப்படை, நவீன ரக ஹெலிகாப்டர்களையும், மூன்று

ஏ டி எப் டேங்கர்களையும் மீட்புப் பணிகளுக்காக அனுப்பியுள்ளது.

உத்தராகண்ட் முதலமைச்சர் விடுத்துள்ள வேண்டுகோளின் பேரில் அம்மாநிலத்துக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்து தரும் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

கேரள மாநிலத்தில் நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட வயநாட்டில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் தொடர்ந்து முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

ராணுவத்தினர், காவல்துறையினர் மற்றும் தன்னார்வ மீட்புக் குழுவினர் கடும் சிரமங்களுக்கு இடையே மீட்புப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மண்ணில் புதையுண்டிருந்த நான்கு குழந்தைகள் உட்பட எட்டு பேரை ராணுவத்தினர் இன்று மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மண்ணில் புதையுண்ட உடல்களை மீட்பதற்கு பொக்லைன் உள்ளிட்ட பெரிய எந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

பெரிய மரங்கள் மற்றும் பெரிய கற்கள் மூடியிருப்பதால் அவற்றை அகற்றும் பணி பெரும் சிரமத்திற்கு இடையே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மோப்ப நாய்கள் மட்டுமல்லாது நவீன வெப்ப மானிகளையும் பயன்படுத்தி புதையுண்ட உடல்களை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 308-ஆக அதிகரித்துள்ளது.

பாதிக்கப்பட்ட எழாயிரத்திற்கும் மேற்பட்டோர் வயநாட்டில் உள்ள 91 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**[]<<<>>>[]**

ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தல் இந்த ஆண்டு நடைபெறுவதையொட்டி சொந்த ஊரில் பணியாற்றும் அதிகாரிகள் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் பணியாற்றுபவர்களை வேறு இடங்களுக்கு மாற்றம் செய்யுமாறு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

அம்மாநில தலைமைச் செயலாளருக்கு தேர்தல் ஆணையம் எழுதியுள்ள கடிதத்தில், தேர்தல் பணியில் ஈடுபடும் அதிகாரிகள் எக்காரணம் கொண்டும் தங்கள் சொந்த மாவட்டங்களில் நடைபெறும் பணிகளில் ஈடுபடக்கூடாது என்றும், அனைத்து பொறுப்புக்களையும் திரும்பப் பெறுவதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எந்த ஒரு அரசியல் கட்சியுடனும் தொடர்புடைய அதிகாரியையும் தேர்தல் பணியில் கண்டிப்பாக ஈடுபடுத்தக்கூடாது என்றும் தேர்தல் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

**[]<<<>>>[]**

புதுச்சேரி மீனவர்களுக்கு மீன்பிடி தடைகால நிவாரணத் தொகை எட்டாயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

புதுச்சேரி சட்டப்பேரவையில் இன்று நடப்பு ஆண்டுக்கான பட்ஜெட்டை முதலமைச்சர் திரு ரங்கசாமி தாக்கல் செய்து பேசுகையில் இதனை அறிவித்தார்.

மேலும் உயர்கல்வி பயிலும் அரசு பள்ளி மாணவர்களுக்கு ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கும் புதிய திட்டத்தையும் அவர் அறிவித்தார்.

ஷெடியூல்டு வகுப்பு மற்றும் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்கு திறன் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் 25 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் புதிய குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களுக்கு இம்மாதத்தில் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்று மாநில உணவு மற்றும் கூட்டுறவுத்துறை முதன்மை செயலர் திரு ராதாகிஷ்ணன் தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருகே மூவாநல்லூரில் கட்டப்பட்டு வரும் நெல் சேமிப்பு கிடங்கை ஆய்வு செய்த பின், செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நடப்பு ஆண்டில் 33 லட்சத்து 14 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு ஏழாயிரத்து 221 கோடி ரூபாய் பணப்பட்டுவாடா செய்யப்பட்டுள்ளதாக் கூறினார்.

நியாயவிலைக் கடைகளில் அனைத்து பொருட்களும் தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், தேர்தல் நேரத்தில் விநியோகிக்கப்படாத பருப்பு போன்ற பொருட்களை சேர்த்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மக்கள் விரும்பும் பொருட்களை ரேஷன் கடைகள் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நடப்பு ஆண்டு விவசாயிகளுக்கு 16 ஆயிரத்து 500 கோடி ரூபாய் கூட்டுறவு கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

உரம் உள்ளிட்ட இடுப்பொருட்கள் தட்டுப்பாடின்றி வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் பெய்து வரும் கனமழை காரணமாக அம்மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2015-ஆம் ஆண்டுக்குப் பிறகு அம்மாநிலத்தில் அதிக அளவு மழைப்பொழிவு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மழையால் ஏற்பட்ட விபத்து காரணமாக ஜெய்ப்பூர் மாவட்டத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

நகரின் பல்வேறு சாலைகள் வெள்ளத்தால் சூழ்ந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

இஸ்ரேல் மீது நேரடியாக தாக்குதல் நடத்தப்போவதாக ஈரான் அச்சுறுத்தியுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நேதன்யாகு தொலைபேசி வாயிலாக அமெரிக்க அதிபர் திரு ஜோ பைடனிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து அமெரிக்கப் படையினரை பாதுகாப்புக்காக இஸ்ரேல் அனுப்புவது குறித்து அதிபர் திரு ஜோ பைடன் நேற்று ராணுவ அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இது தொடர்பாக வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஈரான் மற்றும் ஹமாஸ், ஹெஸ்புல்லா, பௌத்தீஸ் உள்ளிட்ட அமைப்புகளிடமிருந்து எந்த அச்சுறுத்தல் வந்தாலும் இஸ்ரேல் நாட்டை பாதுகாப்பதில் அமெரிக்கா உறுதியுடன் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் எல்லைப்பகுதியில் நீடித்து வரும் போர் நெருக்கடியை தணிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவும் அமெரிக்கா உறுதிபூண்டுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

அதிபர் திரு ஜோ பைடனுடன், இஸ்ரேல் பிரதமர் திரு நேதன்யாகு, தொலைபேசிய வாயிலாக பேசியபோது துணை அதிபர் திருமதி கமலா ஹாரீஸும் உடனிருந்து ஆக்கப்பூர்வமான ஆலோசனை வழங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹமாஸ் அமைப்பின் தலைவர் இஸ்மாயில் ஹனியே டெஹ்ரானில் கடந்த புதன்கிழமை கொல்லப்பட்டதை அடுத்து, ஈரானுக்கும் - இஸ்ரேலுக்கும் இடையே பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

**[]<<<>>>[]**

நைஜீரியாவில் நேற்று நள்ளிரவு நேரிட்ட குண்டுவெடிப்பு சம்பவத்தில் 16 பேர் உயிரிழந்தனர். 20-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

அந்நாட்டின் வடகிழக்கு மாகாணமான போர்னோவில் உள்ள **Kawuri** நகரின் இரவுநேர சந்தையில் இந்த குண்டு வெடித்ததாக நைஜீரிய காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

தூரத்திலிருந்து குண்டை வெடிக்க வைக்கக்கூடிய கருவிகளை பயன்படுத்தி இந்த குண்டு வெடிப்பு நிகழ்த்தப்பட்டிருப்பதாகவும் காவல்துறை கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

கொழும்புவில் நடைபெற உள்ள இப்போட்டி பிற்பகல் மணி 2-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

பாரீஸ் ஒலிம்பிக் பேட்மிட்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் லக்ஷயா சென் - தைவானின் **Tien Chen Chou**-ஐ எதிர்கொள்கிறார்.

ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

துப்பாக்கி சுடுதல், கோல்ஃப், வில்வித்தை, ஜூடோ, துடுப்புப்படகு, பாய்மரப்படகு மற்றும் தடகளப் போட்டிகளிலும் இந்திய வீரர்கள் இன்று பங்கேற்கின்றனர்.

பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கி சுடுதல் பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்ற ஸ்வப்நில் குசாலே-வுக்கு இன்று மக்களவையில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

**[]<<<>>>[]**

தைவான் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 6-1, 6-1 என்ற செட் கணக்கில் பிரான்ஸின் ஆர்த்தூர் **Weber** -ஐ வென்றார்.

**[]<<<>>>[]**

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீவள்ளி ரஷ்மிகா – தாய்லாந்தின் மனான் சையா இணை அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

***End of News***